*கவனிக்க.- 2017.11.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2045 - 2017 නොවැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2017.11.10

*2045 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1858 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் (திருத்தம்) சட்ட மூலம் 2017 நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017 நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1857- B81225 - 5,403 (2017/11)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மாகாண, வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் அத்துடன் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சு - மேல் மாகணம்

மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்

பயிற்சி பாடநெறிக்காக ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2018

மாகாண, வீதி, போக்கு வரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, மற்றும் வாணிபம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் அத்துடன் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சின் கீழ் காணப்படும் மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மரவேலை, மென் பொறியியல், இலத்திரனியல் தொழில் நுட்பம் ஆகிய பயிற்சிப் பாடநெறிகளுக்காக (சிங்கள மொழிமூலம்) 2018 ஆம் ஆண்டில் பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன், அதில் ஆர்வம் உள்ள பின்வரும் தகைமையைக் கொண்ட மேல் மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பாடநெறி | NVQ மட்டம் | காலம் | கட்டணம் | கல்வித் தகைமை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | முழு நேரம் | பகுதி நேரம் |
| 01 | மரவேலை உற்பத்திப் பயிற்சிப் பாட நெறி<br>• தச்சுத் தையல் வரைதல்<br>• மரவேலைக்கு உரிய இயந்திரங்கள்/ கைக்கருவிகளை இணங்காணுதல்<br>• மரவேலைத் தொழிநுட்பம்<br>தொழில்முறைக் கணிதம் | - | 12 மாதங்கள் | இலவசமாக | க.பொ.த (சா.த.) தோற்றிய அல்லது 8 ஆம் தரத்தில் சித்தி பெற்ற பெண்/ ஆண் இருபாலாருக்கும் | வயது வேறுபாடு இல்லை |
| 02 | மென் பொறியியல் தொழில் நுட்ப பயிற்சிப் பாடநெறி<br>• ஒட்டுதல்<br>• சிறப்பு கடைசல்<br>• லேலை<br>• எரிவாயு மற்றும் மின்சார ஒட்டு வேலை<br>• கம்மாலை வேலை<br>• வடிவியல் மற்றும் மின்சார இயந்திர இழுவை<br>• அகநிலை<br>ஆங்கிலம். | NVQ 03 | 12 மாதங்கள் | இலவசமாக | க.பொ.த. (சா.த.) தோற்றிய அல்லது 8 ஆம் தரத்தில் சித்தி பெற்ற ஆண்களுக்கு | |
| 03 | இலத்திரனியல் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறி<br>• அடிப்படை மின்சார தொழில்நுட்பம்<br>• நேரடி மின்சாரம் மற்றும் மாற்று மின்சாரம்<br>• வானொலியும் தொலைக்காட்சியும்<br>• அகநிலை<br>ஆங்கிலம். | | 06 மாதங்கள் | இலவசமாக | க.பொ.த. (உ.த.) தோற்றிய அல்லது க.பொ.த. (சா.த.) அல்லது சித்தி பெற்ற ஆண்/பெண் இருபாலாருக்கும் | |

- பயிற்சிப் பாடநெறியினை சிறப்பாக பூர்த்திசெய்த பயிற்சியாளர்களுக்கு தொழிற்பயிற்சியுடன் தொடர்புடைய அரசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

- முழுநேர பயிற்சிப் பாடநெறியின் போது பயிற்சிக் காலத்திற்காக 250 ரூபா நாளாந்த வருகைப்படி வழங்கப்படும்.

**பாடநெறிக்காக விண்ணப்பித்தல்** :

- ✓ உங்களினால் சுயமாக தயாரிக்கப்படும் விண்ணப்பத்தில் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், விருப்பமான பாடநெறி, கல்வித் தகைமை உள்ளடங்கலாக 2017.12.12 ஆந் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

- ✓ விண்ணப்பப்படிவம் இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பாடநெறியினைக் குறிப்பிட வேண்டும்.

- ✓ விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், மற்றும் உரிய தகைமைகள் இல்லாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி** :

பணிப்பாளர்,
மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்,
இலக்கம். 787/3, நியூசிற்றி கட்டடம்,
கடுவெல வீதி,
மாலம்பே.
0113049208
0113106074

11 - 640